# துறவு அவசியந்தானா?

## ஞானதேவர் தனது தந்தை விடோபாவிடம் நடத்திய உரையாடல்:

ஞானதேவர் குழந்தை போன்று பாசத்துடனும், மரியாதையுடனும் தன் தந்தை விடோபாவின் மடி மீது அமர்ந்து கொண்டு தன் தந்தையை நாட்டிற்கு திரும்புமாறு விண்ணப்பித்தார்.

அப்போது ஞானதேவரின் சகோதரர்களும், சகோதரியும் உடனிருந்தனர்.

ஞானதேவரின் விருப்பத்திற்கு விடோபா கீழ்க்கண்டவாறு பதிலளிக்கிறார்.

விடோபா : வாந்தியெடுத்த உணவு எவ்வளவு தான் சுவையாக இருந்தாலும் அதை ஒருவன் உண்பானா? நேர்மையான ஒருவன் சொல்லிய சொல்லிற்கு மாறாக நடப்பானா? உலக வாழ்வில் இருந்து ஓய்வு பெற்ற ஒருவன் மீண்டும் நாட்டிற்கு திரும்பி அறிவில்லாத மக்கள் கூட்டத்தில் கலந்து அவர்களை நேசிப்பானா? அல்லது அரசனுக்கு அடி பணிந்து வணங்கித் தான் வாழ்வானா? அதனால், இனி இந்த காடே கதி என்று இருப்பேன். நாடு உங்களுடையது. எனவே நீங்கள் நாட்டிற்கு திரும்பச் சென்று உங்களது வாழ்க்கையை தொடருங்கள்.

ஞானதேவர் : நீங்கள் ஏன் காட்டில் வாழ்கிறீர்கள்?

விடோபா : மகனே! இதற்கு மேல் நான் நாட்டிற்கு திரும்பிச் செல்வதால் என்ன சுகம்? அல்லது எனக்கு என்ன நன்மை ஏற்படப் போகிறது? நான் மீண்டும் நாட்டிற்கு சென்றால், எனக்கு அது உதவியாக இருப்பதற்கு பதிலாக என்னை நான் காத்து கொள்வதற்கு அது தடையாகவே இருக்கும். நான் மௌன யோகம் (எண்ணம் இல்லாத நிலை) செய்வதற்கு மக்கள் எவரும் இல்லாத இந்த காடே சரியான இடம். அதனால் தான் நான் இந்த மலைகளில் வாழ்கிறேன்.

ஞானதேவர் : முற்றிலும் வித்தியாசங்களை பாராட்டிக் கொண்டு காடு வேறு நாடு வேறு என்று கூறி நீங்கள் பழகும் பிரம்மயோகம் (அனைத்தும் ஒன்றே என அறிதல்) எப்படியிருக்கிறது என்றால், ஒருவன் ஆகாயத்தை தன் கண்களால் பார்க்கக் கூடாது என நினைத்து, அதற்காக தன் இரு கண்களையும் மூடிக் கொள்வதற்கு பதிலாக, ஆகாயத்தை மறைத்து விட பெரிய துணியைத் தேடினாற் போல் உள்ளது அல்லது ஒரு சிறு பறவை பெரிய இடியை தன் சிறு பாதங்களில் தாங்க

நினைப்பது போல் உள்ளது அல்லது ஒரு ஒழுக்கமற்றவன் புண்ணியம் சம்பாதிக்க நினைப்பது போல் உள்ளது அல்லது ஒரு கொடூரமானவன் இறைவனைக் காண ஆசைப்படுவது போல் உள்ளது அல்லது ஒருவன் தனது அகங்காரத்தை விட்டு விடாமலேயே ஞானியாக நினைப்பது போல் உள்ளது. அனைத்தும் ஒன்றாக - அனைத்து வித்தியாசங்களையும் கடந்துள்ள பிரம்மயோகத்தில் வேறுப்பாட்டிற்கு இடம் ஏது?

விடோபா : நான், எனது என்ற எண்ணம் இருக்கும் வரை அது வேறு இது வேறு என்ற இரட்டைகள் ஒழியாது. அனைத்து இரட்டைகளும் ஒழிய வேண்டுமென்றால் அது நிர்விகல்ப சமாதியில் மட்டுமே முடியும். இந்த யோகம் நாட்டை துறந்து, ஆசைகள் மற்றும் எண்ணங்கள் அனைத்தையும் துறந்தால்தான் கிடைக்கும். அதனால்தான் இந்த தனிமையான காட்டில் நான் வாழ்கிறேன்.

ஞானதேவர் : தான் யார் என்று உணர்ந்து பின் அதுவாகவே ஆவது தான் பிரம்மயோகம் தவிர, காட்டில் வாழ்வதல்ல.

விடோபா : ஒருவன் தான் யார்? என்பதை ஒரு குரு மூலமாக அறிந்தாலும் கூட, அதன் பின் அதிலேயே நிலைத்திருப்பதற்கு தனிமையாக வாழ வேண்டியது அவசியமல்லவா?

ஞானதேவர் : காட்டில் வாழ்வதாலும் மற்றும் தவம் புரிவதாலும் மட்டுமே நான், எனது என்கின்ற உணர்வு மற்றும் அஞ்ஞானத்தை அழிக்க முடியாது என்றே உண்மையான ஞானிகள் அனைவரும் உணர்ந்துள்ளார்கள். அதனால், ஞானிகள் துறவு வேறு, காடு வேறு, நாடு வேறு, இல்வாழ்க்கை வேறு என்ற வேறுபாடுகளைக் கலைந்து மிக உறுதியான மனதுடன் நிர்விகல்ப சமாதி பழகினார்கள். ஆதலால் நீங்கள் எதற்கு இப்படி வாழ்க்கையை காட்டிலே கழிக்க வேண்டும்?

விடோபா : எவன் ஒருவன் தன்னிலே தானாகி, இவ்வுலகனைத்தையும் சாட்சியாக பார்க்கின்றானோ அவன் இல்லறத்தில் இருந்தால், அது சமாதிக்கு தடையாக அமைந்து, தன்னிலே தானாகி நின்ற அனுபவ உணர்வையும் இழந்து விடுவான். ஆதலால் சகஜானந்த நிலையை அடைந்தவர்கள் கனவிலும் இல்லறத்தில் ஈடுபட ஆசைப்பட மாட்டார்கள்.

ஞானதேவர் : விருப்பு வெறுப்புகள் அற்ற நிலையே சகஜ யோகமாகும்.

அப்படியிருக்க, நாட்டை வெறுத்து, காட்டை விரும்பி வாழ்வது சகஜ யோகமாகுமா?

விடோபா : உலக செயல்கள் எதையும் செய்வதற்கோ அல்லது செய்யாதிருப்பதற்கோ ஆசையற்று இருப்பவனால், எவ்வாறு ஈடுபட முடியும்? மேலும், இவ்வுலக செயல்களில் ஈடுபட தகுதியற்றவன், இந்த நாட்டில் வாழ்வதால் என்ன பயன்?. எந்த இடத்தில் உடலின் சுகத்திற்கு ஆசையைத் தூண்டி அதனால் எண்ணற்ற இன்னல்களை ஏற்படுமோ, அந்த இடத்தில் ஒருவரும் இருக்கக் கூடாது. அவ்வாறு இருந்தால், பிணத்துடன் திருமணம் செய்து கொண்டு கொண்டாடுவது போலாகும்.

ஞானதேவர் : எவனொருவன் எல்லா செயல்களையும் செய்வதற்கான ஆசைகள் அனைத்தையும் துறந்து விட்டானோ, அவன் சமாதி பழகுவது என்ற செயல் மட்டும் செயல் ஆகாதா? ஆதலால், இந்த செயலைச் செய்பவன் ஏன் இல்லறச் செயல்களையும் செய்யக் கூடாது?

விடோபா: சமாதி பழகுவது கூட செயல் தான் என்றாலும், இது அனைத்து எண்ணங்களையும், கவலைகளையும் நீக்கும். மாறாக, உலகியல் செயல்கள் எல்லா விதமான எண்ணங்களையும், கவலைகள் மற்றும் துன்பங்களையும் உருவாக்கி விடும்.

ஞானதேவர் : ஒருவன் தானே சத் சித் ஆனந்தமாக அதாவது, உண்மை அறிவு ஆனந்தமாக இருக்கும் போது அவன் எதற்காக சாதனைகளில் ஈடுபடவேண்டும்.

விடோபா : விழிப்பு நிலையில் தூக்கத்தை உணர்வது தான் பிரம்மயோகம் (தூங்காமல் தூங்குவது) என்று ஞானிகள் கூறுவார்கள். அவ்வாறு உணரவில்லையெனில் தடையற்ற ஆனந்தம் சமாதியில் கிடைக்குமா?

ஞானதேவர் : ஆனால், வேதங்கள் ஒரு பட்டத்தின் நிழலைப் போன்று (பட்டத்தின் நிழல் எதன் மேல் பட்ட போதிலும், பட்டம் அதனிடம் விருப்பு கொள்வதோ அல்லது அதனால் பாதிக்கப்படுவதோ இல்லை) விழிப்பு, கனவு, மற்றும் உறக்க நிலையில் ஏற்படும் மாறுபாடுடைய மன உணர்வுகளை ஒரு பார்வையாளனைப் போல் கவனித்து கொண்டிருப்பதில் தான் உண்மையான ஆனந்தம் இருக்கிறது என்று கூறுகிறது.

தூக்கத்தில் இருப்பது போன்ற ஒரு சூன்ய நிலையில் இருப்பதையா நீங்கள் உண்மையான ஆனந்தம் என்று கூறுகிறீர்கள்? இந்த நிலை தானா விழிப்பில் உறக்கம் (தூங்காமல் தூங்குவது) எனப்படுவது.?

விடோபா : விழிப்பு மற்றும் கனவு நிலை, ஒருவனை உலகியல் செயல்களில் அழுத்திவிடும். மேலும், காட்டு விலங்குகளைப் போல் உள்ள புலன்களுக்கு தன்னையே இரையாக்கி விடநேரிடும். ஆதலால் எந்த சமாதியில் உலக செயல்கள் அனைத்தும் முற்றுப் பெற்று அந்த இடத்தில் தூக்கத்தில் உள்ளது போன்ற ஒரு சூன்ய அவஸ்த்தை ஏற்படுமோ அதுவே உண்மையான சமாதியாகும்.

ஞானதேவர் : ஒன்றுமில்லாத சூன்ய அவஸ்தையானது, மிக உயர்ந்த சமாதியாக இருக்க முடியாது. உதைக்கு உதை கொடுப்பது போல் உலகியல் செயல்கள் அனைத்தும் செய்து கொண்டு அதே நேரத்தில் உறுதியான ஞானம் என்ற வாலின் உதவியுடன் புலன் நுகர் பொருட்களை முழு கட்டுப்பாட்டில் வைத்து அதனிடம் இருந்து வேறுபட்டிருக்க வேண்டும். மன்னன் ஜனகனைப் போல்.

விடோபா : கணக்கற்ற ஜனமங்களில் சேர்த்து வைக்கப்பட்டுள்ள ஆழ்மனது, ஆசைகள் அனைத்தையும் அழித்து இந்த குரங்கு மனதை வெற்றி கொண்டுள்ள சுகர் தான் உறுதியான ஞானம் பெற்றவறே அன்றி, துங்குவது போன்ற ஒரு நிலையை அனுபவிக்காத ஜனகர் அல்ல.

ஞானதேவர் : கோல் ஆடினால் குரங்கு ஆடுவது போல், மனதை முற்றிலும் வென்று, தான் விரும்பியதை அந்த மனதால் செய்து கொண்டிருந்த ஜனகரே உறுதியான ஞானம் பெற்றவரே தவிர, அனைத்து ஆசைகளையும் துறந்து தனது வாழ்நாள் முழுவதும் காட்டில் வாழ்ந்த சுகர் அல்ல.

விடோபா : இவ்வுலக வாழ்க்கையை ஒழிக்க வேண்டும் என்றால் அது அவன் உலக வாழ்வை விட்டு வெளியே வந்தால் தான் முடியும். அது எவ்வாறு ஒருவன் உலக வாழ்வை அனுபவித்துக் கொண்டே உலக வாழ்வை ஒழிக்க முடியும். ஒரு விசம் குடித்த மனிதனை காப்பாற்ற விசத்தையே கொடுத்தால் அவன் மரணமடைவது நிச்சயமல்லவா?

ஞானதேவர் : ஒரு விசத்தை முறிப்பதற்கு வேறொரு விசத்தை மருந்தாக

உண்பவனே அறிவாளி. அவனே உட்புற மற்றும் வெளிப்புறமாக அலையும் புலன்களின் அபாயங்களிலிருந்து தனது உறுதியான ஞானத்தால் காத்துக் கொள்வானேயன்றி காட்டு விலங்குகளைப் போன்ற புலன்நுகர் பொருட்கள் தன்னை மீண்டும் எப்பொழுது தாக்குமோ என்று பயந்து கொண்டே தான் இருப்பான் யோகத்தில் உள்ளவன். அவன் பயத்தைத்தான் உணர்வானேயன்றி நிச்சயமாக பேரானந்தத்தை அல்ல.

விடோபா : தவ வாழ்க்கையில் ஈடுபட்டு எந்த நேரமும் யோகத்தில் உள்ளவர்களைக் கூட புலன்நுகர் பொருட்கள் துன்பத்தை கொடுத்துவிடுகின்றவென்றால், உலக வாழ்க்கையில் உள்ளவர்களின் நிலைமையைச் சொல்லவும் வேண்டுமா? ஒரு காய்ந்த இலையானது கொந்தலித்துக் கொண்டு ஓடும் வெள்ளத்தில் விழுந்தால் அது அசையாமல் ஒரே இடத்தில் நிற்குமா?

ஞானதேவர் : எத்தனை ஆண்டுகள் ஒருவர் உள்முகமாக யோகத்தில் அமர்ந்திருந்தாலும் அவரிடம் உறுதியான ஞானம் இல்லை யெனில் அவரை புலன்கள் கீழே தள்ளிவிட்டு துன்பத்தில் ஆழ்த்திவிடும். எத்தகைய தாங்க முடியாத துன்பம் நேர்ந்தாலும், எண்ணிலடங்கா புலன் நுகர் செயல்கள் செய்ய நேர்ந்தாலும், எப்படி ஒரு மிகப் பெரிய பாறையானது வெள்ளத்தில் விழுந்தால், அங்கேயே அசையாமல் நிற்கிறதோ அவ்வாறே ஒருவர் உறுதியாக நிற்க வேண்டும். அப்படிப்பட்ட ஒருவரால் மட்டுமே மிக உயர்ந்த பிரம்மானந்த உணர்வை அனுபவிக்க முடியும். ஞானத்தில் உறுதி இல்லாத ஒருவரை அறியாமை விட்டு விலகாது.

விடோபா : எவ்வளவு தான் ஒருவர் ஞானத்தில் உறுதியாக இருந்தாலும், உலக வாழ்வை துறந்து எந்த நேரமும் பிரம்மத்தை தியானிக்கா விட்டால் நிச்சயமாக இந்த மாயை என்னும் இருட்டில் விழுந்து விடுவார்.

ஞானதேவர்: பிரம்மத்தை விட்டு தனியாக மாயை என்று ஒன்று இருந்தாலல்லவா யோகத்தில் இருப்பவன், மாயையை விட்டு விலகுவதற்கு. ஒருவனின் நிழல் அவனிடம் சண்டையிடும் என்று கூறுவது போல் உள்ளது. உண்மையில் இல்லாத அறியாமைக்கும் அகங்காரத்திற்கும் பயந்து யோகத்தில் எந்த நேரமும் இருக்க வேண்டும் என்பது. ஒருவன் உண்மையில் இல்லாத தன் நிழலுடன்

சண்டையிடுவதின் பலனாக கிடைப்பது களைப்பு மட்டுமே. மாயையின் அநித்தியத்தை உணர்ந்து அமைதியாக இல்லாமல், இதுவல்ல, இதுவல்ல என்று ஒவ்வொன்றாக ஒதுக்கிக் கொண்டு போனால் உங்களுக்கு முடிவில்லாத கஷ்டங்கள் தான் ஏற்படும்.

விடோபா : எதனாலும் அசைக்கப்பட முடியாதவனாகவும், சாட்சி பாவனையுடன் கூடியவனாகவும் சகஜ ஞானத்தை அடைய வேண்டுமென்றால், அது மாயையை அகற்றாமலேயே எப்படி முடியும்?

ஞானதேவர் : எவ்வாறு ஒரு கரையான் மலையிலிருந்து கரையான்கள் வெளிப்பட்டுக் கொண்டேயிருக்குமோ அவ்வாறே, நாம் எவ்வளவுக்கெவ்வளவு மாயையை அல்லது உண்மையில்லாதவற்றை விலக்க நினைக்கின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு அது தோன்றிக்கொண்டே இருக்கும். எந்த அளவிற்கு நாம் மனதை ஒருமுகப்படுத்த முயல்கிறோமோ, அந்த அளவிற்கு மனம் கலங்கி துன்புறுகிறது, சுவற்றில் அடித்த பந்தானது அடித்த வேகத்தில் திரும்புவது போல். எந்த அளவிற்கு நாய் வாலை நிமிர்த்த முயன்றாலும் அது மீண்டும் சுருட்டிக் கொள்ளுமோ அதே போல் ஒருவன் எந்த அளவிற்கு சாட்சி பாவனையில் இருக்க நினைக்கின்றானோ அந்த அளவிற்கு நான், உடல் போன்ற அஞ்ஞானத்தில் சிக்கிச் கொள்ளவே நேரிடும். எனவே, ஞான விசாரம் ஒன்றின் மூலமாக மட்டுமே பிரம்மானந்தத்தை அனுபவிக்க முடியும். முத்துச்சிப்பியில் தோன்றும் வெள்ளித் தோற்றத்தைப் போல, பிரம்மமே அஞ்ஞானமாகவும், உண்மையில்லாத மாயையாகவும் தோற்றம் அளித்துக் கொண்டிருக்கிறது.

விடோபா : துன்பத்தைக் கொடுக்கும் புலன்நுகர் பொருட்களை வெற்றி கொண்டு எல்லா இடங்களிலும் பரந்து விரிந்துள்ள ஆனந்தமயமான இறைவனுடன் கலந்து விடுவதற்கு வேறு எந்த சாதனைகளையும் பயிலாமல் வெறும் ஞான விசாரம் ஒன்றின் மூலமாக நான் பிரம்மம் என்று உணர்ந்தாலே போதுமா?

ஞானதேவர் : ஒரு புலியைக் கொல்வதற்கு ஒரு உயிருள்ள பசுவால் முடியாது எனும்போது ஒரு இறந்துபோன பசுவால் கொல்ல முடியுமா? அது போல கலங்கமற்று எங்கும் பரந்து விரிந்துள்ள, என்றும் மாறாத, ஆனந்தமயமான பிரம்மத்தை

புலன் நுகர் பொருட்கள் என்ன செய்து விடமுடியும்? மிகப் பெரிய பசுவாக இருந்தாலும், ஒரு புலியை சந்திப்பதற்கு பயப்படுவது போல, உறுதியான ஞானத்தில் நிலைத்துள்ள ஞானியின் முன்னால் வருவதற்குக் கூட புலன்நுகர் பொருட்களுக்கு தைரியம் வராது. ஒரு வேளை எதிரில் வந்தாலும் கூட எவ்வாறு புலியானது பசுவை சுலபமாக வென்று விடுமோ, அவ்வாறே ஞானியானவன் சுலபமாக வென்று விடுவான்.

விடோபா : எவ்வாறு ஒரு பெண் கற்புக்கரசியாக இருந்தாலும் விலை மாதர்களுடன் கூடிப்பழகினால் கற்பிழந்து விடுவாளோ அவ்வாறே தன்னை ஞானியாக கருதும் ஒருவன் அஞ்ஞானிகளுடன் கூடிப்பழகினால், புலன்நுகர் பொருட்களில் சிக்கி, மனது குழம்பிப் போய் முற்றிலும் துன்பத்திற்கு ஆளாகிவிடுவான்.

ஞானதேவர் : மிகவும் உறுதியான நிலைமாறா மனம் கொண்ட கற்புக்கரசி யானவள் எத்தனை எண்ணிக்கையிலான விலை மாதர்களுடன் கூடிப்பழகினாலும் தன் கற்பை இழக்க மாட்டாள். உறுதியில்லாத மனம் கொண்டவள் கெட்ட சகவாசம் எதுவும் இல்லாமல் இருந்தாலும், தவறி விழுவதற்கான சந்தர்ப்பத்திற்காக காத்திருப்பாள். ஆதலால், உறுதியான ஞானம் கொண்டவர் எத்தனை அஞ்ஞானிகள் மத்தியில் வாழந்தாலும் தனது மெய்யுணர்வை எந்நிலையிலும் இழக்கமாட்டார். அதே போல், உறுதியில்லாத ஞானம் கொண்டவன் தனிமையில் வாழ்ந்தாலும் கூட தனது ஞானத்தை இழந்துவிடுவான்.

விடோபா : இல்லறத்தில் வாழ்ந்து கொணடே ஒருவன் எவ்வாறு சகஜ ஞானியாக ஆக முடியும்?

ஞானதேவர் : ஒரு ஞானி, அஞ்ஞானிகளுடன் கலந்து, அவர்களுடன் பல வேலைகளைச் செய்து கொண்டிருந்தாலும், அவர் எப்போதும் சகஜானந்தத்திலேயே இருப்பார். இது எப்படி யெனில், ஒரு அரசனானவன் பிச்சைக்காரன் வேடம் ஏற்று ஒரு நாடகத்தில் பிச்சைக்காரனாகவே நடித்தாலும், அவன் எப்போதும் பிச்சைக்காரன் ஆகிவிடாமல் அரசனாகவே தான் உள்ளான்.

விடோபா : எவ்வளவு தான் உறுதியும் ஆன்மீகத் தெளிவும் உள்ளவனாக இருந்தாலும், ஒவ்வொரு நாளும் சிறிது நேரமாவது “நானே பிரம்மம்” என்று ஆழ்ந்து

நினைக்காவிட்டால் அவன் பிரம்மஞானி ஆவது என்பது மிகவும் கடினம்.

ஞானதேவர் : பிச்சைக்கார வேடமணிந்து ஒரு நாடகத்தில் நடித்துக் கொண்டிருக்கும் அரசன் தன்னை அடிக்கடி அரசன் என்று நினைவு படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமா? அவ்வாறு அவன் நினைக்காவிட்டால், அரசன் பிச்சைக்காரனாகத்தான் ஆகிவிடுவானா? உலகம் முழுவதும் அறிந்த அரசனை மற்றவர்களோடு தனித்து வேறுபடுத்திக் காட்டுவதற்காக, கண்டிப்பாக தலையில் கிரீடம் அணியத்தான் வேண்டுமா? "நான்" என்ற அகங்காரத்தை அழித்து விட்ட பின்னும் கூட ஒருவன் இந்த அகங்கார உணர்வை விடாமல் பற்றிக் கொண்டு "நானே பிரம்மம்" என்று தியானித்துக் கொண்டே இருக்க வேண்டுமா? உலகறிந்த அரசனை அவன் தலையின் கிரீடம் அணியாவிட்டாலும் மக்கள் எல்லோரும் அவனை அரசன் என்றே ஏற்றுக் கொள்வர். அதேபோல் நான், எனது என்ற அபிமானத்தை விட்டொழித்தவன், மேற்கொண்டு அவன் எந்த தியானத்தை பயிலாவிட்டாலும் அவன் சத்சித் ஆனந்தத்திலேயே தான் இருப்பான்.

விடோபா : ஒருவன் இறைவனாகவே இருந்தாலும் தினமும் நான் பிரம்மம் என தியானம் செய்யாவிட்டால் சந்தேகமின்றி அவன் அஞ்ஞானி ஆகிவிடுவான். தன்னை உடல் என்று பாவித்திருக்கும் அகங்கார உணர்வு அவ்வளவு எளிதில் அழியாது.

ஞானதேவர் : ஒருவன் விளக்கை கையில் பிடித்துக் கொண்டு இருட்டை அங்கேயே இருக்கச் சொன்னாலும் அது இருக்குமா? அதே போன்று ஒருவன் தன்னை உடலாகவும் மற்றும் உடல் உறுப்புக்களாகவும் கருதி வந்த அஞ்ஞான உணர்வை அழித்து விட்டு, அனைத்தும் நானே என்கின்ற ஞான ஒளியைப்பெற்ற பிறகு அஞ்ஞானத்தை கேட்டுக் கொண்டாலும் அது அங்கே இருக்காது. ஒரு கையில் பூனையைப் பிடித்துக் கொண்டு மற்றோரு கையில் கிளியைப் பிடித்துக் கொண்டு கிளியிடம் பேசச் சொன்னால் பேசுமா? அது போல, நான் எனும் எண்ணம், தெய்வம் மற்றும் இவ்வுலகம் ஆகிய அனைத்தும் உண்மையில்லாத தோற்றம் என்று அறிந்த பிறகு, மாயையை வா என்றாலும் வருமோ? ஒரு ஆண்மையில்லாத அரவானி அல்லது அலி தன்னை ஒரு ஆண்மகன் என்று ஒரு பெண்ணிடம் கூறிக்கொண்டு முன்னால் நிற்பதற்கு உண்மையில் வெட்கப்படுவாள். அது போல, ஒருவன்

ஒருமுகமாக பிரம்மம் மட்டுமே உண்மை, மாயை உண்மையில்லாத வெறும் தோற்றமே என்றும் பிரம்மம் அனைத்து எண்ணங்களுக்கும் அடியில் ஆதாரமாக உள்ளது என்றும் ஆனால், மாயையோ விருப்பு, வெறுப்புகளுடன் கூடியது என்றும் அந்த ஒன்றே-பிரம்மம் அது தானே என்றும் எந்த வித சந்தேகங்களுக்கும் இடமில்லாமல் உணர்ந்து விட்ட பிறகு விருப்பு, அல்லது வெறுப்பு, அடிமை அல்லது விடுதலை, பிறப்பு அல்லது இறப்பு, நாடு அல்லது காடு, தர்மம், தவம், சன்னியாசம், குடும்பம் இவையெல்லாம் அவனுக்கு ஏது? செத்துப்போன ஆட்டுக்குட்டியின் கண்களைப் போல் (வெளித் தோற்றத்தில் அனைத்தையும பார்ப்பது போல் தோன்றினாலும் உண்மையில் எதையும் பார்க்காதது போல்) வாழும் ஒருவனுக்கு எதிராக மாயையானது எள் அளவேனும் தன்னுடைய சக்தியைக் காட்ட முடியுமா? அல்லது அவனை மீண்டும் அஞ்ஞானத்தில் தள்ளத்தான் முடியுமா? தயவு செய்து சற்று ஆழமாக சிந்திக்கவும்.

இதன் பிறகு விடோபா காட்டை விட்டுவிட்டு வீட்டுக்கு திரும்ப ஒப்புக்கொண்டார்.

= = = =